சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 17.04.2018

அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 04–ம் நாள் (ஏப்ரல் திங்கள் 17–ம் நாள்:–17.04.2018) செவ்வாய் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 20.12.2017ம் தேதிய ந.க.எண்.15040/2017/இ1 எண் செயல்முறைகளின்படி, 2017–18ம் ஆண்டிற்கான மூலதன மான்ய நிதி மற்றும் இயக்குதலும் மற்றும் பராமரிப்பு நிதி திட்டத்தின் கீழ், நகராட்சிக்குட்பட்ட வ.எண்.3ல் அமைந்துள்ள சாமிகுளத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள ரூ.250.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 26.03.2018ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு.பி.சிவசாமி, ஒப்பந்தகாரார், தேனி | – | 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல் |
| 2. M/s செந்தூர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்தக்காரார் மதுரை. | – | 21.30 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல் |

**அலுவலகக் குறிப்பு:–** **மூலதன மான்ய நிதி மற்றும் இயக்குதலும் மற்றும் பராமரிப்பு நிதி 2017–18ன் கீழ் பெறப்பட்டுள்ள பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்தினை விட கூடுதல் விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி விகிதங்களில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விகிதமாகிய வரிசை எண். எண்.1 க்கு 4.98 சதவிகிதம் கூடுதல் விகிதம் கோரிய ஒப்பந்ததாரர் திரு.பி.சிவசாமி, தேனி அவர்கள் ஒப்பந்தப்புள்ளிகள்கெடுத்துள்ளார். ஒப்பந்தவிலை விகிதத்தை காட்டிலும் குறைவாக வழங்ககோரி (Negotiation) கடிதம் அனுப்பியதில் அன்னாரின் 03.04.2018ம் தேதிய கடிதத்தில் கட்டிடம் பணிகளுக்கான மூலதனப் பொருட்கள் விலையேற்றம் மற்றும் பணிபுரியும் தொழிலாளர்களின் கூலி உயர்வு காரணமாக தங்களால் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தை காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் மேற்கண்ட பணிகளை செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள் என்ற விபரத்தினை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.3234/2017/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண்கள்.7/10, 7/12 மற்றும் 7/13 அமையும் 2428.4 ச.மீ அளவு கொண்ட நிலப்பரப்பிற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரியது தொடர்பாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மதுரை அவர்களுக்கு தொழில் நுட்ப அனுமதிக்கு பரிந்துரை செய்யப்பட்டதில், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலையை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)

அவர்களின் 06.04.2018ம் தேதிய ந.க.எண்.1186/18/மம3 என்ற எண்ணிட்ட கடிதத்தின்படி அறிவுறுத்தப்பட்டதற்கிணஙக மனைப்பிரிவு உரிமையாளரால் 9.05 மீ அகலம் கொண்ட சாலையினை, தமிழக ஆளநர் அவர்களின் பிரதிநிதியான ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக பத்திரபதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். மனைப்பிரிவு அனுமதி கோரியதில் நகர் ஊரமைப்பு துறையால் அறிவுறுத்தப்பட்டபடி மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவில் உள்ள சாலையினை உள்ளாட்சிக்கு தானமாக கொடுத்துள்ளதும், சாலையினை தார் சாலையாக அமைத்தும் சாலையின் இரண்டு பக்கங்களிலும் வடிகால் அமைக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.0809/2018/எப்1)

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் 2017–2018ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் 50 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு ஓராண்டு காலத்திற்கு துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழுஙகப்பட்டு 31.03.2018ம் தேதியுடன் மேற்படி பணிக்காலம் முடிவடைகிறது.

இந்நிலையில், பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.1085/P3/2016, நாள்.31.08.2016ன்படியும், மேலும் ஓராண்டு காலத்திற்கு மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவர் மூலம் கால நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதியும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7080000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.576/2015/எச்1)

**தீர்மான எண், நாள்**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளின் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தமைக்கு ரூ.4000/– மட்டும் Green Link Analytical and Research Laboratory (India) Private Limited, கோயம்புத்தூர் அவர்களுக்கு ரூ.4000/– மட்டும் வழஙகப்பட்டது.

இந்நிலையில் போக்குவரத்து மற்றும் கள ஆய்வு செலவினத்தை சேர்த்து ரூ.7965/– மட்டும் வழங்கக்கோரி மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதல் தொகை (7965–4000=3965) ரூ.3965/– மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0054/2017/எச்1)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் இந்நகராட்சியில் குடியிருப்பு பகுதி, வணிக நிறுவனப் பகுதி மற்றும் உரக்கிடங்கு பகுதியில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, Green Link Analytical and Research Laboratory (India) Private Limited, கோயம்புத்தூர் அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்படி குப்பைகளின் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்து தரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க (500+3500) ரூ.4000/–க்கான விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்படி தொகை ரூ.4000/–த்தினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0054/2017/எச்1).

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான 25 எண்ணம் காம்பாக்டர் பெட்டிகள் வாங்குவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 09.04.2018ம் நாளன்று கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் விவரம் | காம்பாக்டர் பெட்டி ஒன்றின் விலை |
|---|---|---|
| 1. | குருநாத் எண்டர்பிரைசஸ்<br>4/413A4, சோமநாதபுரம், பரமக்குடி | ரூ.39800/– |
| 2. | ஸ்ரீ முத்தா எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங்<br>4/229, ஹாஸ்பிட்டல் ரோடு, பரமக்குடி | ரூ.39900/– |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1இல் காணும் குருநாத் எண்டர்பிரைசஸ், பரமக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3680/2017/எச்1)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் உதவியாளராகப் பணிபுரியும் திரு.வ.போஸ் என்பவர் தனது பிறந்த தேதி 05.04.1960 என உள்ளதை 21.03.1961 என மாற்றம் செய்ய வேண்டி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.7630/2018ன்படி வழக்கு தொடர்ந்தமைக்கு வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ.9500/– திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அரசு வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4112/2015/சி1)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளின் விவரம் குறித்து தமிழக அரசின் ஓராண்டு சாதனை மலரில் அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் அலுவலக ந.க.எண்.38/செ.ம.தொ/2018, நாள்.19.02.2018 தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட விவரம் குறித்து மாலை முரசு நாளிதழில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.8000/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1191/2018/இ1)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

தமிழ்நாடு அரசு அரசிதழில் 25.01.2018ம் நாள் வெளியிடப்பட்டுள்ள விவரப்படி, 1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 83 உட்பிரிவு (1) (C ) க்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருத்தத்தின்படி, நகராட்சி / மாநகராட்சிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி / மாநகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்படவேண்டும் என தெரிவித்து வரலான சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 15.03.2018 (ம) 28.03.2018ம் தேதியிட்ட ந.க.எண்.1234/2014/ஆர்1 சுற்றறிக்கை (ம) மின்னஞ்சல் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** பதிவு செய்யலாம் (ந.க.எண்.1342/2018/அ1).

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு 37 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு DBC பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **05.04.2018ம்** நாளன்று கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர், முத்துலாபுரம் | ஒரு நபருக்கு ஊதியம் ரூ.250/– |
| 2. | கே.வனராஜ், ஒப்பந்ததாரர், சின்னமனூர் | ஒரு நபருக்கு ஊதியம் ரூ.255/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர், முத்துலாபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0680/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட விஸ்வன்குளம், அய்யனார்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு செல்லும் பகிர்மான குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் குழாய்கள் மாற்றியமைக்கும் பணி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள **26.03.2018ம்** தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் – 0.20% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.முனிசாமி, ஒப்பந்ததாரர் – 0.40% மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்து (0.20%) திரு.எஸ்.சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0555/2018/இ1).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சிக்குப் பணியாளர்களின் சேமநல நிதி இறுதி இருப்புக்கு தனி நபர்களுக்கு 1991–1992 முதல் 2015–2016 முடிய உள்ள காலத்திற்கு (5வது மற்றும் 6வது ஊதியக்குழு நிலுவை உட்பட) அதாவது 25 ஆண்டுகளுக்கு தனித்தனியாக கணக்கீடு செய்து, அது தொடர்புடைய இதர பணிகள் சேர்த்து அட்டவணை தயார் செய்து வழங்க விலைப்புள்ளிகள் கோரியதில் 28.03.2018ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி ஆண்டுக் கேள்வி ரூபாய் |
|---|---|---|
| 1. | வெங்கட் ஈவண்ட்ஸ்<br>எண்.13, வேல் நகர் விஸ்தரிப்பு,<br>(டி.ஏ.வி.பள்ளி அருகில்), ஆதம்பாக்கம்,சென்னை–85 | ரூ.4083.90<br>(விலைப்புள்ளியில் குறித்துள்ள 1,2 மற்றும் 3) |
| 2. | ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம்,<br>எண்.02,முதியால்ரெட்டி நகர், 3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை–88 | ரூ.3033.00<br>(விலைப்புள்ளியில் குறித்துள்ள 1,2 மற்றும் 3) |
| 3. | என்.டெக் சொலுசன்ஸ்,<br>10, கௌதமர் தெரு, கிழக்கு தாம்பரம்,<br>சென்னை–59. | ரூ.3538.50<br>(விலைப்புள்ளியில் குறித்துள்ள 1,2 மற்றும் 3) |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2இல் கண்டுள்ள சென்னை, ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம் நிறுவன விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5403/2013/அ2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சியின் கணினி பிரிவில் 2018–19ம் ஆண்டில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மற்றும் பிரிண்டர்கள், நகல் எடுக்கும் இயந்திரம் போன்றவைகளுக்கு ஆண்டு பராமரிப்பு பணி, அனைத்து இயந்திரங்களுக்கும் இதர பழுது பார்த்தல் பணி மேற்கொள்ளுதல், தேவைக்கேற்ப டோனர்கள், கணினிகள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.1568/2013/இ2)

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இந்நகராட்சியின் மூலம் விநியோகம் செய்யும் குடிநீரை மாவட்ட குடிநீர் பரிசோதனை நிலையத்தில் மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்யும் பொருட்டு **2018–2019**ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.18000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.2961/2014/இ2).

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்கு **2018–2019**ம் ஆண்டுக்கு தேவையான புத்தகங்கள் மற்றும் படிவங்கள் எழுது பொருட்கள் கூட்டுறவு அச்சகத்தில் இருந்து வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் மதிப்பு ரூ.5.00 இலட்சத்திற்கு மட்டும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4081/2017/பி2).**

**தீர்மான எண், நாள்**
**தீர்மானம்**

*******